வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேனி பழனி

தேதி-7.10.2025 நேரம்- மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

கடந்த 11 ஆண்டுகளில் நாடு பல்வேறு துறைகளில் முக்கிய மாற்றங்களை சந்தித்து இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், மகராஷ்டிரா மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு நிலவரங்கள் மற்றும் காவல் துறையின் செயல்பாடுகள் குறித்து மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

நச்சுத்தன்மை கொண்டதாக கூறப்படும் இருமல் மருந்துக்கு புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மோடி 25 ஆண்டுகள் 1 (4)

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசுத் தலைவராக நாட்டுக்கு சேவை புரிவதில் இன்று 25 ஆண்டுகளை எட்டி உள்ளார். இந்த 25 ஆண்டுகளில் மக்கள் தம் மீது காட்டி வரும் தொடர்ச்சியான அன்பிற்கும்,

நம்பிக்கைக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு......

(வாய்ஸ்)

மோடி 25 ஆண்டுகள் 2 (17)

(வாய்ஸ்)

நாட்டிற்கு சேவை புரிவது மிகப் பெரிய கவுரவம் என்றும், நன்றி உணர்வு மற்றும் சேவை நோக்கத்தால் தம்மை நிரப்பக் கூடிய கடமையாகவே இதை தாம் கருதுவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். 25 ஆண்டுகளுக்கு முன்னர் குஜராத் முதலமைச்சராக தாம் பதவியேற்ற போது, குஜராத் எழுச்சி பெற முடியாது என்றே பலர் கருதிய போதிலும், குஜராத்தை நல்லாட்சியின் கேந்திரமாக தாம் மாற்ற முடிந்ததற்கு, கூட்டு முயற்சியே காரணம் என்று, அவர் தெரிவித்துள்ளார். 2014 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்திலும், நம்பிக்கையின்மை மற்றும் நிர்வாகக் குறைபாடுகளுக்கு இடையில் தான் நாட்டு மக்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை வழங்கியதாக, அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் நாடு பல்வேறு துறைகளில் முக்கிய மாற்றங்களை சந்தித்து இருப்பதாகவும், நாடு முழுவதும் 25 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாகவும்,

பெண்கள், இளைஞர்கள் மற்றும் விவசாயிகளின் அதிகார பங்கேற்பு மேம்பட்டு உள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

மோடி 25 ஆண்டுகள் 3 (9)

தற்போது உலகப் பொருளாதாரத்தில் ஒளிரும் புள்ளியாக இந்தியா திகழ்வதையும், மருத்துவ வசதிகள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களின் முக்கிய கேந்திரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தியாவை எல்லா துறைகளிலும் சுய சார்பு நாடாக மேம்படுத்துவதே நாட்டு மக்களின் பொதுவான உணர்வாக திகழ்வதையும், அவர் சுட்டிக் காட்டி உள்ளார். முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் கனவை நனவாக்குவதில், இன்னும் கடினமாக தொடர்ந்து பாடுபட தாம் உறுதி அளிப்பதாகவும், இதில் அரசியல் சாசனமே தமது நிரந்தர வழிகாட்டியாக திகழும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி மேலும் கூறியுள்ளார்.

மோடி-மகராஷ்டிரா 1 (18)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், மகராஷ்டிரா மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். 19 ஆயிரத்து 650 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, முதல் கட்ட நவிமும்பை சர்வதேச விமான நிலையம்,

மற்றும், 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள, 3 ஆம் கட்ட மும்பை மெட்ரோ ரயில் பாதையை, நாளை அவர் திறந்து வைக்கிறார். 11 விதமான போக்குவரத்து நிறுவனங்களின் சேவைகளை ஒருங்கிணைத்து வழங்கும் வகையிலான நாட்டின் முதலாவது மும்பை-ஒன் பொதுப் போக்குவரத்து செயலியை பிரதமர் தொடக்கி வைக்கிறார். 400 அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 150 தொழில்நுட்ப பள்ளிகளை சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன்களை வழங்குவதற்கான மகராஷ்டிர அரசின் குறைந்த கால பயிற்சி திட்டத்தையும் அவர் தொடக்கி வைக்கிறார்.

நாளை மறுநாள் 9 ஆம் தேதி மும்பையில் இங்கிலாந்து பிரதமர் திரு கியர் ஸ்டாரமரை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு கூட்டாண்மை உறவுகளின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்கிறார். அடுத்த 10 ஆண்டுகளுக்குள், வர்த்தகம், முதலீடுகள், பாதுகாப்பு, எரிசக்தி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காலக்கெடு

மோடி-மகராஷ்டிரா 2 (5)

அடிப்படையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கிலான விஷன்-2035 திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்படும். பிராந்திய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மோடி – மொபைல் (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லி யசோபூமியில் 9 ஆவது இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டை தொடக்கி வைக்கிறார். தொலைதொடர்பு, ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய, ஆசியாவின் மிகப் பெரிய இந்த 4 நாள் மாநாட்டில், 6-ஜி மற்றும் செமி கண்டக்டர் தொழில்நுட்பத்திலும், கண்ணாடி இழை மற்றும் குவாண்டம் தகவல் தொடர்பிலும், இந்தியா முக்கிய கவனம் செலுத்தி வருவதை எடுத்துக் காட்டும் வகையில் நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன. மத்திய அரசின் தொலைதொடர்பு துறையும், செல்போன் சேவை வழங்கும் நிறுவனங்களின் கூட்டமைப்பும் இணைந்து இதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

நமச்சிவாயம் (13)

புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு நிலவரங்கள் மற்றும் காவல் துறையின் செயல்பாடுகள் குறித்து மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் காவல் துறை உயரதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். போதை பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதிலும், சைபர் குற்றங்களை கண்டுபிடிப்பதிலும் காவல் துறை எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது. புதிய

சட்டங்களை காவல் துறை சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும், காவல்துறைக்கு வரும் புகார்கள் மீது 100 சதவிகிதம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுவதாகவும் உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அனுமதியின்றி திறந்திருக்கும் ரெஸ்டோபார்கள் மீது வழக்கு பதிவு செய்ய கலால் துறைக்கும் உத்தரவிடப் பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார். அமைச்சர் திரு நமச்சிவாயம் பேட்டியில் இருந்து ஒரு பகுதி.......

(வாய்ஸ்-நமச்சிவாயம்)

இருமல் மருந்து (16)

குறிப்பிட்ட கால கட்டத்தில் தயாரிக்கப்பட்ட coldrif இருமல் மருந்தில் நச்சுத் தன்மை கொண்ட ரசாயனம் கலந்திருப்பதாக கூறப்படுவதால், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்த மருந்தின் கொள்முதல், விநியோகம் மற்றும் விற்பனை தடை செய்யப்படுவதாக மருந்து கட்டுப்பாட்டு துறை உத்தரவிட்டுள்ளது. இந்த மருந்தை உட்கொள்வதால் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் என்றும், மரணம் கூட நேரலாம் என்றும் தமிழக மருந்து கட்டுப்பாட்டுத் துறை அனுப்பியிருந்த எச்சரிக்கையின் அடிப்படையில் பொதுமக்களின் நலன் கருதி இவ்வாறு தடை விதிக்கப்படுவதாக புதுச்சேரி மருந்து கட்டுப்பாட்டுத்துறையின், கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் அனந்தகிருஷ்ணன் தமது உத்தரவில் தெரிவித்துள்ளார். இந்த மருந்தை சந்தையில் இருந்து உடனடியாக

அகற்றவும் உத்தரவிடப் பட்டுள்ளது. இதேபோன்ற ரசாயண கலவை அடங்கிய மருந்துகளை, மருத்துவரின் பரிந்துரை சீட்டு இருந்தால மட்டுமே விற்கலாம் என்றும், விற்பனை தொடர்பான ஆவணங்களை பராமரிக்க தவறினால் மருந்து விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் உத்தரவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜிஎஸ்டி டெல்லி 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவத்தினால், நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிடிஸ்டி சீர்திருத்தங்களால் டெல்லி தலைநகர பிரதேசத்தில் பொருளாதாரம் எவ்வாறு ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி டெல்லி 2 (18)

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், டெல்லி தலைநகர பிரதேசத்திலும், அத்தியாவசிய பொருட்களின் விலை குறைந்து, சந்தை வலுப்பெறுவதுடன், வியாபாரிகளின் வர்த்தக வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. 7 ஆயிரத்து 500 ரூபாய் வரையுள்ள ஹோட்டல் அறை

வாடகை மீது ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், டெல்லிக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமையல் அறை பொருட்கள் மீதான வரிக் குறைப்பினால் பொதுமக்கள் மட்டுமின்றி, சிறு மற்றும் நடுத்தர உணவகங்கள் மற்றும் கேட்டரிங் நிறுவனங்களும் பயன் பெறுகின்றன. டெல்லி தலைநகர பிரதேசத்தின் விருந்தோம்பல் துறை வலுப்பெறுவதால் இத்துறையில் பணிபுரியும் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களின் வருவாய் அதிகரித்து புதிய வேலை வாய்ப்புகளும் உருவாக உள்ளன. காலணிகள் உள்ளிட்ட தோல் பொருட்கள், மேசை-நாற்காலிகள் மற்றும் அச்சுப் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளதால் இத்துறை சார்ந்து டெல்லியில் செயல்பட்டு வரும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஊக்கம் பெறுகின்றன. மொத்த தில் அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக டெல்லி தலைநகர பிரதேசத்திற்கு பல்துறைப் பலன்கள் ஏற்படுவதில் ஐயமில்லை.

*நிதித் தொழில்நுட்பம்* (17)

நிதித் தொழில்நுட்பம் பற்றிய 6 ஆவது உலக ஃபின்டெக் திருவிழா, மும்பையில் இன்று தொடங்கி உள்ளது. உலக அளவிலான தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், புதுமை படைப்பாளிகள், மற்றும் நிபுணர்கள் இந்த 3 நாள் விழாவில் கலந்து கொண்டு, நிதித் தொழில்நுட்பத்தின்

எதிர்காலம் குறித்து விவாதிக்கிறார்கள். பிரதமர் திரு நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் திரு கியர் ஸ்டார்மர் ஆகியோர், வரும் வியாழக்கிழமை இம்மாநாட்டில் முக்கிய உரையாற்றுவார்கள் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு மூலம் நல்லுலகு படைப்பதில் நிதித் தொழில்நுட்பத்தின் பங்கு என்ற கருப்பொருள் அடிப்படையில், தேசிய பணப் பட்டுவாடா கவுன்சில், இவ்வாண்டு உலக ஃபின்டெக் திருவிழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது. என்-விடியா நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, பாரத் ஏஐ அனுபவ மண்டலம், இவ்விழாவில் முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. 400 க்கும் மேற்பட்ட ஃபின்டெக் நிறுவனங்கள், தங்களின் தொழில்நுட்ப படைப்புகளை காட்சிக்கு வைக்கின்றன. பல்வேறு தலைப்புகளில் பயிலரங்குகள் மற்றும் போட்டிகளும், இளம் தொழில்முனைவோர் மூலதனம் திரட்டுவதற்கான வசதிகளும், விழாவில் இடம் பெறுகின்றன.

ஃபிக்கி ஃபிரேம்ஸ் (16)

திரைப்படம், ஊடகம் மற்றும் கேளிக்கை துறை பற்றிய மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெள்ளி விழா ஃபிக்கி ஃபிரேம்ஸ் மாநாட்டை அமைச்சகத்திற்கான அரசு செயலர் திரு சஞ்சய் ஜாஜூ, நடிகர் ஆயுஷ்மான் குரானா ஆகியோர், மும்பையில் இன்று தொடக்கி

வைத்தனர். கடந்த 25 ஆண்டுகளில் கேளிக்கை மற்றும் ஊடகத் துறை பெரிய அளவில் வளர்ச்சி அடைந்திருப்பதாக திரு சஞ்சய் ஜாஜு தொடக்க விழாவில பேசுகையில் கூறினார். இத் துறையின் மதிப்பு, 25 ஆயிரம் கோடி ரூபாயில் இருந்து, 2 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். இந்திய திரைப்படங்கள் உலக அளவில் வரவேற்பு பெற்று வருவதை அவர் சுட்டிக்காட்டி, உலகிற்கு விருப்பமான இன்னும் பல கதைகளையும் இந்தியா வழங்க முடியும் என்றார். நாட்டின் கலாச்சார வலுவை, உலகிற்கு விருப்பமான படைப்பாற்றலாக மாற்றுவதே, ஊடகம் மற்றும் கேளிக்கை துறை பற்றிய ஆரஞ்சு பொருளாதாரம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். மகராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னவீஸ், பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கவுரவ் துவிவேதி உள்ளிட்டவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.